**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 11.9.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாரணாசியில், மொரீசியஸ் பிரதமர் திரு நவீன்சந்திர ராம்கூலத்துடன், இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.
- தகவல் தொழில் நுட்பம் மற்றும் மின்னணு உற்பத்தி துறையில் இந்தியா, உலகின் முக்கிய கேந்திரமாக மேம்பட்டு வருவதாக, மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.
- மத்திய அரசு அறிவித்துள்ள அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக மோட்டார் வாகன உற்பத்தி துறையில் முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.
- சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் கேந்திரமாக புதுச்சேரியை மேம்படுத்த பல வாய்ப்புகள் உள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

***<u>ே□ாடி-பயணம்</u>***

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாரணாசியில், மொரீசியஸ் பிரதமர் திரு நவீன்சந்திர ராம்கூலத்துடன், இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார். இதைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே, அறிவியல்-தொழில் நுட்பம், பெருங்கடலியல், நிர்வாக பயிற்சி உள்ளிட்ட துறைகளில் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இந்தியாவின் மானிய

உதவியுடன், மொரீசியசில் சிறு அளவிலான வளர்ச்சி திட்டங்களை மேற்கொள்வது குறித்து 3 ஆவணங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்தியாவும் மொரீசியசும் ஒரே மாதிரியான கனவுகளைக் கொண்ட இரு நாடுகள் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி, கூட்டு செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். இருநாடுகளும் ஒரே குடும்பமே தவிர, வெறும் கூட்டாளிகள் அல்ல என்று அவர் குறிப்பிட்டார். இந்தியாவிற்கு வெளியே, இந்தியாவின் முதலாவது ஜன்அவுஷதி மருந்தகம், மொரீசியசில் நிறுவப்பட்டு இருப்பதையும், சென்னை ஐஐடி உள்ளிட்ட இந்திய உயர்கல்வி நிறுவனங்கள், மொரீசியஸ் பல்கலைக் கழகத்துடன் உடன்பாடு எட்டி இருப்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

வாரணாசியைத் தொடர்ந்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை டேராடூன் சென்று, உத்தராகண்ட் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, வான்வழியே பார்வையிடுகிறார்.

<u>வைஷ்ணவ்</u>

மேக் இன் இண்டியா உட்பட, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு திட்டங்களால், தகவல் தொழில் நுட்பம் மற்றும் மின்னணு உற்பத்தி துறையில் இந்தியா உலகின் முக்கிய கேந்திரமாக மேம்பட்டு வருவதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார். சிறு தொழில் முனைவோர் நலப் பாதுகாப்பு தொடர்பான, லகு உத்யோக் பாரதி அமைப்பின் சார்பில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற, ஐடியாத்தான் மாநாட்டின் நிறைவு விழாவில் இன்று அவர் உரையாற்றினார். ஐடி துறையில் இந்தியாவின் வளர்ச்சி குறித்து உலகமே பேசி வரும் நிலையில் இந்தியாவின் மின்னணு உற்பத்தி துறையும், 11.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள துறையாக மேம்பட்டு, 25 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்து வருவதாக அவர் தெரிவித்தார். இந்தியாவில் தயாராகும் மின்னணு உற்பத்தி பொருட்கள் தற்போது வெளிநாடுகளுக்கு

ஏற்றுமதி செய்யப்படுவதையும், நீண்டகால கனவுகளை நிறைவேற்றும் வகையில் இந்தியாவில் அண்மையில் செமி-கண்டக்டர் உற்பத்தி தொடங்கி இருப்பதையும் அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் சுட்டிக் காட்டினார்.

***<u>ஜிஎஸ்டி ே□ாட்டார் வாகனம்</u>***

நாட்டு மக்களுக்கான தீபாவளி பரிசாக இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்ட அறிவிப்பின்படி, அண்மையில் ஜிஎஸ்டி வாரியம் பல்வேறு துறைகளுக்கு வரிக் குறைப்பு அறிவித்துள்ளது. அனைத்து பிரிவு மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் வகையிலான, இந்த, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக மோட்டார் வாகன உற்பத்தி துறையில் ஏற்படக் கூடிய பலன்கள் குறித்து ஒரு செய்தி தொகுப்பு.............

***<u>ஜிஎஸ்டி ே□ாட்டார் வாகனம்</u>***

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், சிறிய கார்கள், மற்றும், 350 cc வரை உள்ள இருசக்கர வாகனங்கள் மீதான ஜிஎஸ்டி, 28-ல் இருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. பேருந்து, லாரி, 3 சக்கர வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் மீதான வரியும் 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. மின்சார வாகனங்களுக்கான 5 சதவிகித சலுகை வரி தொடரும் என்றும், சொகுசு வாகனங்கள் மீது மட்டும் 40 சதவிகித வரி விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மோட்டார் வாகனங்களின் விலை குறைவதால், சாதாரண மக்களுக்கு மிகப் பெரிய பலன் ஏற்படும்.நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரத்தில் முக்கிய பங்களிக்கும் மோட்டார் வாகன உற்பத்தி துறையும், தொடர்புடைய இதர துறைகளும் மூன்றரைக் கோடிக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை வழங்கும் நிலையில், புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் மோட்டார் வாகனங்களுக்கான தேவை

அதிகரித்து வளர்ச்சி வாய்ப்புகள் பெருகும் என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

<u>*பாரதியார்*</u>

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவு நாளான இன்று புதுச்சேரியில், பாரதி பூங்காவில் உள்ள அன்னாரது சிலைக்கு துணை நிலை ஆளுநர் டாக்டர் கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், குடிமைப்பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு திருமுருகன் உள்ளிட்டோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய் சரவணன் குமார், திரு கே எஸ் பி ரமேஷ், திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, செய்தி விளம்பரத் துறை செயலர் திரு முகமது அஹ்சன் அபீத் ஆகியோரும் கலந்து கொண்டனர். முன்னதாக ஈஸ்வரன் கோவில் வீதியில் உள்ள பாரதியார் நினைவு அருங்காட்சியகத்தில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பாரதியாரின் திருவுருவப் படத்திற்கு, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் தலைமையில், மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவாக பாரதியாரின் தேசப் பக்திப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

<u>*புதுச்சேரி-சிறு தொழில்*</u>

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் கேந்திரமாக புதுச்சேரியை மேம்படுத்த பல வாய்ப்புகள் உள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார். தகவல் தொழில்நுட்பம், பாரம்பரிய கைவினைப் பொருட்கள், வேளாண்மை, உணவுப் பதனீடு போன்ற துறைகளில் இத்தகைய வாய்ப்புகள் அதிகம் என்றும் அவர் கூறி உள்ளார்.

சிறு-குறு நிறுவனங்களுக்கான நுழைவு வாயில், புதுச்சேரி என்ற தலைப்பில், மத்திய வெளியுறவு அமைச்சகமும், மாநில அரசும் இணைந்து இன்று புதுச்சேரியில் நடத்திய கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

முத்ரா போன்ற மத்திய அரசின் திட்டங்களை இளைஞர்கள் பயன்படுத்திக் கொண்டு புதுச்சேரியில் சிறு தொழில் தொடங்குவதன் மூலம் சுயசார்பு இந்தியா இலக்கை எட்டுவதில் பங்களிக்கலாம் என்றும் துணை நிலை ஆளுநர் வலியுறுத்தினார். புதுச்சேரியில் தொழில் தொடங்குவதை எளிதாக்க சட்டமன்றத்தில் மசோதா கொண்டு வரப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநில தொழில் துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், தொழில் துறை செயலர் திரு விக்ராந்த் ராஜா, மத்திய வெளியுறவுத் துறை அதிகாரி திரு விஜயகுமார் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

<u>கூட்டுறவு</u>

தேசிய பால் வள மேம்பாட்டு வாரியத்தின் வைர விழாவை ஒட்டி, வாரியத்துடன் இணைந்து, புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த, மாநில அளவிலான கருத்தரங்கம், புதுச்சேரியில் இன்று நடைபெற்றது. சர்வதேச கூட்டுறவு ஆண்டில் கூட்டுறவின் வளர்ச்சி என்னும் இக்கருத்தரங்கின் தொடக்க விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, தேசிய பால்வள வாரியத்தின் தலைவர் டாக்டர் மீனேஷ் ஷா, புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், புதுச்சேரியில் பாண்லே நிறுவனத்தின் வளர்ச்சிக்கு, தேசிய

பால்வள மேம்பாட்டு வாரியம் பல திட்டங்களை வைத்திருப்பதாகவும், இதன் மூலம், பாண்லே சிறந்த முறையில் வளர்ச்சி பெறும் என்றும் கூறினார்.

புதுச்சேரியில் நகரமயம் காரணமாக விவசாய நிலங்கள் குறைந்து வரும் நிலையில், பால் பற்றாக்குறையைப் போக்கி, உற்பத்தியை பெருக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தமது உரையில் கூறினார்...........

(வாய்ஸ்-ரங்கசாமி)

இந்நிகழ்ச்சியின் போது, சிறந்த கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள், இத்தகைய சங்கங்களில் சிறப்பாக செயல்பட்ட உறுப்பினர்கள், மற்றும், சிறந்த கருவூட்டல் தொழில் நுட்ப வல்லுனர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன.

<u>வானிலை</u>

இன்றைய தினம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி- காரைக்கால் பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 17-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, மதுரையில், 13 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

## கிரிக்கெட்

ஆசிய கோப்பைக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று இரவு அபுதாபியில் நடைபெறும் பி-பிரிவு போட்டியில், பங்களாதேஷ்-ஹாங்காங் அணிகள் மோத உள்ளன. துபாயில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், இந்திய அணி, 9 விக்கெட் வித்தியாசத்தில், யுஏஇ அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

## ஞான பாரதம்

இந்தியாவின் பழங்கால ஓலைச்சுவடிகளை பேணிக் காத்து, டிஜிட்டல் மயம் மூலமாக மக்களிடையே பரப்புவதற்கான, ஞான பாரதம் தேசிய முன் முயற்சியின் கீழ் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற ஞான பாரதம்-சர்வதேச மாநாட்டை, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தொடக்கி வைத்தார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் நாடு, கலாச்சார மறுமலர்ச்சி கண்டு வருவதாக அவர் கூறினார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நம்முன்னோர் உணர்ந்து வெளிப்படுத்திய வாழ்க்கை பாடங்கள், இன்று வரை, மனித குலத்திற்கும் சுற்றுக்சூழலுக்கும் பயன் அளித்து வருவதாக அவர் தெரிவித்தார். உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட அறிஞர்கள், வல்லுனர்கள், மற்றும், கலாச்சார அமைப்புகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.